<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>
<u>ஜெயங்கொண்டம்.</u>
<u>C.C.No. 282/2025</u>

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–,01 திரு.செல்வதுரை என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செல்வதுரை | வயது | : | 50/26 |
| க.பெ. | : | பிச்சமுத்து | தொழில் | : | **கூலிவேலை** |
| ஊர் | : | **சத்திரம்** | நிலை | : | LW 01/PW01 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(எதிரி ஆஜர் )**

<u>**முதல் விசாரணை:**</u>

நான் சத்திரம் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இநத் விபத்தில் இறந்து போன செந்தமிழ்செல்வன் எனது மகன். கடந்த 05.07.2025 அன்று நான் என் வீட்டில் இருந்தபோது என் பகதத்து வீட்டில் உள்ள ஒரு நபர் எனது மகனுக்கு பிச்சனூர்– சின்னவளையம் ரோட்டில் விபத்து நடந்ததாக தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது எனது மகனை மருத்துவமணைக்கு கொண்டு சென்று விட்டனர். சம்பவம் தொடர்பாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. சம்பவம் தொடர்பாக நான் காவல் நிலையம் சென்று

புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

போலீசார் விசாரணையில் கடந்த 05.07.2025 அன்று எனது மகன் செந்தமிழ்செல்வன் அவனுக்கு சொந்தமான TN 61 AA 6728 என்ற பதிவெண் கொண்ட Hero Splender plus வாகனத்தில் காலை சுமார் 10.45 மணிக்கு ஜெயங்கொண்டம் செல்வதற்காக பிச்சனூர் – சின்னவளையம் ரோட்டில் சுகுமார் தரிசு நிலம் அருகில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அதே திசையில் அவருக்கு பின்னால் வந்த TN 61 Q 5006 என்ற டிராக்டரை அதிவேகமாகவும் அஜாக்கிரதைதயாகவும் ஓட்டி வந்து என் மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி கீழே விழுந்ததில் டிராக்டரின் சக்கரம் என் மகனின் தலையில் ஏறியதில் அவன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாக கேள்விபட்டு சம்பவ இடம் சென்று பார்த்ததாகவும் அங்கு செந்தமிழ் செல்வன் தலை நசுங்கி இறந்து கிடந்ததாகவும் மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபர் வெத்தியார்வெட்டு கிராமத்தை சேர்ந்த விவேக் என்றும் சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரித்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**/ உண்மை நகல் /**

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.